# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 05.11.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் அதிகாரம் அல் பக்கராவின் 263, 275 ஆகிய வசனங்களை ஓதினார்கள்:**

**பொருள்: தங்கள் செல்வத்தை இறைவழியில் செலவிட்டுப் பின்னர் எவ்வகையிலும் உபகாரத்தை நினைவூட்டாமலும், எவ்விதத்திலும் துன்பத்தை கொடுக்காமலும் இருப்போருக்கு, அவர்களின் கூலி அவர்களின் இறைவனிடம் உள்ளது. அவர்களுக்கு எவ்வித அச்சமும் ஏற்படாது. அவர்கள் கவலை அடையவுமாட்டார்கள். (2:263)**

**தங்களுடைய செல்வத்தை இரவிலும், பகலிலும் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் (அல்லாஹ்வின் வழியில்) செலவு செய்பவர்களுக்கு, அவர்களின் இறைவனிடம் அவர்களுக்குரிய கூலி (பாதுகாக்கப்பட்டு) உள்ளது. அவர்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை. அவர்கள் கவலையடையவுமாட்டார்கள். (2:275)**

அல்லாஹ் திருக்குர்ஆனில் ஆரம்பம் முதல் கடைசி வரை ஆங்காங்கே இறைவழியில் செல்வத்தை செலவு செய்வதன் பக்கம் கவனமூட்டியுள்ளான். மேலும் ஒரு நம்பிக்கையாளர் அல்லாஹ்வின் வழியில் தமது செல்வத்தை செலவு செய்து என்னென்ன பலன்களைப் பெறலாம் என்பதை பல்வேறு உதாரணங்கள் மற்றும் பல்வேறு வழிமுறைகள் மூலமாக கூறியுள்ளான். ஆனால் நிபந்தனை என்னவென்றால், இறைவழியில் தியாகம் என்பது இறைதிருப்திக்காக இருக்க வேண்டுமேயொழிய வேறெதுவும் நோக்கமாக இருக்கக்கூடாது.

**அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகின்றான்:**

**நீங்கள் அல்லாஹ்வின் விருப்பத்தை நாடியல்லாமல் செலவு செய்வதில்லை. (2:273)**

எனவே, ஒரு நம்பிக்கையாளர் செலவு செய்வதற்கு முன் இறைதிருப்தியைக் கருத்தில் கொள்கின்றார். மேலும் எதற்காக செலவு செய்வதால் அல்லாஹ்வின் திருப்தி கிடைக்காதோ அதற்காக அவர் செலவு செய்வதில்லை. எனவே நாம் இக்கருத்தினைப் புரிந்து கொண்டால் ஜமாஅத்தின் முன்னேற்றம் மற்றும் தனிநபரின் ஆன்மீகத்தில் முன்னேற்றம் கிடைப்பது மட்டுமல்லாமல் குடும்பத்தில் எழுகின்ற பிரச்சனைகளும் தீர்ந்து விடும். அதாவது என்னுடைய விருப்பத்திற்கேற்ப இந்த பொருளை எனது கணவர் வாங்கித் தரவில்லை என்று கணவன் மீது மனைவி புகார் கூறுகின்றார். அதேபோன்று மனைவி தனது தகுதிக்கு அப்பாற்பட்டு ஆடம்பர செலவு செய்து என்னை கடனாளியாக்கி விட்டாள் என்று கணவன் மனைவியைப் பற்றி முறையிடுகின்றனர். இவ்வாறாக அன்றாடம் குடும்பங்களில் சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன. இந்த சண்டை சச்சரவுகள் எங்கு குடும்ப அமைதியை சீர்குலைத்து விடுகின்றதோ அங்கு பிள்ளைகளின் தர்பிய்யத்திலும் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது. இப்பிரச்சனைகள் பெண்களால் மட்டும் ஏற்படுவதில்லை. மாறாக நானும் பல பிரச்சனைகளைப் பார்த்திருக்கிறேன். ஆண்கள் தமது சம்பளத்தை தமது நண்பர்கள் வட்டத்தில் வீண் செலவு செய்து விட்டு வந்து விடுகின்றனர். அல்லது தன்னுடைய தேவைகளை மட்டும் பூர்த்தி செய்து கொள்கின்றனர். மேலும் குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதில் கருமித்தனம் காட்டுகின்றனர் என்று பெண்கள் ஆண்கள் மீது ஆட்சேபனை செய்கின்றனர். இதன் விளைவாக இவ்விஷயம் குடும்பத்தின் நிம்மதியின்மைக்கு காரணமாகி விடுகின்றது.

எனவே அல்லாஹ்வின் திருப்தியைக் கருத்தில் கொண்டவாறு எங்கு செலவிடப்படுமோ அங்கு குடும்ப அமைதியும் இருக்கும். பிள்ளைகளின் தர்பிய்யத்தும் நல்ல நிலையில் இருக்கும். அதுமட்டுமல்ல, வருமானத்திலும் பரக்கத் (அபிவிருத்தி ஏற்படும். ஜமாஅத்திற்காக தியாகம் செய்யும் மனப்பான்மையும் ஏற்படும். அல்லாஹ்வுக்காக தியாகம் செய்யும் மனப்பான்மையும் ஏற்படும். ஒருவருடைய செல்வத்தில் அவருக்கும், அவருடைய மனைவி மக்கள் மற்றும் அவரின் பராமரிப்பின் கீழ் உள்ளவருக்கும் உரிமை

உள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால் நடுநிலையைக் கைக்கொண்டால், அல்லாஹ்வின் திருப்தியைக் கருத்தில் கொண்டால் அதன் மூலமாக தனது குடும்பத்தினருக்குரிய உரிமைகளும் வழங்கப்படும். அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதன் பக்கமும் கவனம் இருக்கும். அல்லாஹ்வின் அருளால் இவ்வழிமுறையின்படி செயல்படக்கூடிய ஒரு மிகப்பெரிய கூட்டம் நமது ஜமாஅத்தில் உள்ளது. குடும்பத்திற்குரிய உரிமைகளையும் வழங்குகின்றனர். இறைவழியில் பொருள் தியாகமும் செய்கின்றனர். ஆனால் மிக அதிகமான செல்வம் படைத்தவர்களில் சிலர் எப்படிப்பட்டவர்களாக உள்ளனர் என்றால், தமக்காக செலவிடுகின்றனர். ஆனால் அவர்களின் பொருள் தியாகத்தின் தரம், குறைந்த வருமானம் கொண்டவர்களின் பொருள் தியாகத்தின் தரத்தை விட குறைவாக உள்ளது. ஆனால் அதிக வருமானம் உடைய எல்லா அஹ்மதிகளும் அப்படிப்பட்டவர் என்று நாம் கூற முடியாது. நான் ஒரு சிலரை உதாரணமாக கூறுகிறேன். நான் இதற்கு முன்னர் கூறியது போன்று தமது வருமானத்தில் மிகக் குறைந்த பகுதியை தமக்காக செலவிடும் மக்களும் உள்ளனர். அப்படிப்பட்டவர்களை நானும் அறிந்திருக்கின்றேன். கோடிக்கணக்கான ரூபாய்களை அல்லது ஆயிரக்கணக்கான டாலர்கள் மற்றும் பவுண்டுகளை ஜமாஅத்தின் திட்டங்களுக்காக தந்து விடுகின்றனர். மாறாக, நாங்கள் இவ்வளவு பணம் ஜமாஅத்திற்கு கொடுக்க உள்ளோம். அதனை நாங்கள் எங்கு செலுத்த வேண்டும்? என்று மீண்டும் மீண்டும் நம்மிடம் வந்து கேட்கின்றனர். இந்த வருடம் இங்கு கொடுங்கள்; அங்கு தேவையுள்ளது என சிந்தித்து பதிலளிக்க வேண்டியதுள்ளது. இந்த மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் சந்தாக்கள், விருப்பச் சந்தாக்களில் பங்கு பெற்ற பிறகும் இவ்வாறு அதிகமான பணத்தை ஜமாஅத்திற்கு வழங்குகின்றனர். மேலும் இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அல்லாஹ்வின் திருப்தியைத் தேடக்கூடியவர்கள் ஆவர். ஆனால் அவ்வாறிருந்தபோதிலும் நாம் பொருள் தியாகத்திற்குரிய கடமையை நிறைவேற்றி விட்டோமா? இல்லையா? என்று கவலை கொள்பவர்களாக உள்ளனர். மேலும் எங்களுடைய எளிய தியாகத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டதற்கு நன்றி தெரிவித்து அவர்களிடமிருந்து கடிதமும் வருகின்றது. ஆனால் நான் கூறியது போன்று அவர்கள் பெரும் பெரும் தொகையை தந்து விட்டு இவ்வாறு எழுதுகின்றனர். இது ஒருமுறை அல்ல. இருமுறையல்ல. மாறாக இப்படிப்பட்ட மக்கள் இதனை தமது வாழ்க்கையின் நிரந்தர வழிமுறையாக ஆக்கிக் கொண்டுள்ளனர். எல்லா சந்தாக்கள் மற்றும் திட்டங்களிலும் பங்குபெற்ற பிறகு நான் கூறியது போன்று பெரும் தொகையை தந்து நீங்கள் எங்கு இதனை செலவிட விரும்புகின்றீர்களோ அங்கு செலவிட்டுக் கொள்ளுங்கள் என்று கூறுகின்றனர். நான் கூறியது போன்று அந்த தொகை எங்கு தேவை இருக்குமோ அங்கு செலவிடப்படுகின்றது. பள்ளிவாசல் கட்டுவதற்காகவும், மிஷன் ஹவுஸ் கட்டுவதற்காகவும் அல்லது வேறு தேவைகளுக்காகவும் இந்த பணம் செலவிடப்படுகின்றது. நீண்ட காலமாக தர்பிய்யத் பெற்று, தமது முன்னோர்களின் தாக்கத்திற்கு உள்ளான பாகிஸ்தானியர்கள் அல்லது இந்தியர்கள் மாத்திரம் இப்படிப்பட்ட பொருள் தியாகங்களை செய்வதில்லை. மாறாக, ஆப்பிரிக்காவில் வசிக்கக்கூடிய பலரும் பெரும் பெரும் பொருள் தியாகம் செய்கின்றனர். பெரிய பெரிய அழகிய பள்ளிவாசல்களை கட்டித் தந்துள்ளனர். மேலும் ஜமாஅத்தின் பல்வேறு திட்டங்களுக்காக பணம் கொடுக்கின்றனர். மேலும் இவ்வாறு பொருள் தியாகம் செய்யக்கூடியவர்கள் வெளிப்படுத்துகின்ற பணிவு மற்றும் மகிழ்ச்சியிலிருந்து இவர்கள் அல்லாஹ்வின் திருப்திக்காக செலவிடுவதற்கு துடிப்பு மிக்கவர்களாக உள்ளனர் என்பது தெரிய வருகின்றது. நான் ஓதிய வசனத்திற்கேற்ப அவர்கள் அல்லாஹ்வின் வழியில் செலவிட்டு விட்டு நாங்கள் ஜமாஅத்திற்கு இவ்வாறு கோடிக்கணக்கான ரூபாய்களை கொடுத்துள்ளோம் என்று பின்னர் ஒருபோதும் அவர்கள் வெளிப்படுத்துவதும் கிடையாது. நாம் ஜமாஅத்திற்கு பெரிய உபகாரம் செய்து விட்டோம் என்று எண்ணுவதுமில்லை. மாறாக, நான் கூறியது போன்று மிகப் பணிவுடன் அவர்கள் பணத்தைக் கொடுக்கின்றனர். பின்னர் நம்முடைய இந்தப் பொருள் தியாகத்தின் உரிமைகளை சரியாக வழங்கியுள்ளோமா? இல்லையா? என்று கவலை கொள்கின்றனர். மேலும் இறைவனின் நன்றியுடைய அடியார்களாக திகழ்கின்றனர். இப்படிப்பட்ட தியாகம் செய்வதற்கான பாக்கியத்தை அவர்கள் அல்லாஹ்வின் கருணையாக கருதுகின்றனர். இங்கு இவ்விஷயத்தைக் கூறுவது அவசியமானதாகும். ஜமாஅத்தின் பெரும்பான்மையான மக்கள் குறைந்த வருமானம் உடையவர்கள்தான். நான் கூறியது போன்று அவர்களும் அசாதாரண பொருள் தியாகம் செய்யக்கூடியவர்கள் ஆவர். ஜமாஅத் இவ்வளவு திட்டங்களை (சந்தாக்களை) ஏற்படுத்தி வைத்துள்ளது. எங்களது வருமானமோ குறைவாக உள்ளது. நாங்கள் எங்கிருந்து கொடுப்போம்?

என்று ஒருபோதும் புலம்புவதில்லை. மாறாக ஒரு உணர்வுடன், துடிப்புடன் இந்தப் பொருள் தியாகங்களில் பங்குபெறுகின்றனர். மேலும் நாங்கள் எங்களுடைய மற்றும் எங்களது பிள்ளைகளின் தேவைகளை குறைத்துக் கொண்டு சந்தா கொடுத்துள்ளோம் என்பதை சொல்லிக் காட்டுவதுமில்லை. மேலும் நாங்கள் இவ்வளவு பொருள் தியாகம் செய்துள்ளோம். இப்போது எங்களுக்கு இன்னின்ன தேவைகள் ஏற்பட்டுள்ளது. இதனை ஜமாஅத் தான் நிறைவு செய்து தர வேண்டும் என்று கூறுவதும் கிடையாது. அதாவது தமது பொருள் தியாகத்தை ஜமாஅத்திற்கு செய்த உபகாரமாக எண்ணுவது கிடையாது. மாறாக, தேவை ஏற்பட்டாலும் கூட மிக கூச்சத்துடன் பணிவுடன் தமது விருப்பத்தை தெரிவிக்கின்றனர். அதுவும் கடனாகவே கேட்கின்றனர். சில மக்கள் சந்தா கொடுப்பதற்கென்று சில தனிப்பட்ட வழிகளை ஏற்படுத்தி வைத்துள்ளனர். அவர்களுடைய வருமானம் மிகக் குறைவாகவே இருக்கின்றது. எனவே ஒரே நேரத்தில் சந்தாக்களை வழங்குவது இயலாததாகும். எனவே ஒரு டப்பாவை வீட்டில் வைத்துக் கொள்கின்றனர். அதில் சந்தாவிற்காக தினமும் ஏதாவது கொஞ்சம் போட்டுக் கொண்டு வருகின்றனர். அதிலிருந்து தஹ்ரீகே ஜதீத, வக்ஃபே ஜதீத் அல்லது பிற சந்தாக்களை கொடுத்து விடலாம் என்று எண்ணி இவ்வாறு செய்கின்றனர். இதுபோன்று பல உதாரணங்கள் உள்ளன.

ஒருவர் எனக்கு எழுதினார்: நான் டப்பாவில் பணத்தை முழு வருடமும் சேமித்து வந்தேன். கடந்த ஆண்டு எனது தஹ்ரீகே ஜதீத் வாக்குறுதிக்கேற்ப இந்த ஆண்டு பணம் சேர்த்து விட வேண்டும் என எண்ணி சேர்த்து வந்தேன். இறுதியில் சந்தா கொடுப்பதற்காக டப்பாவை திறந்த போது தொகை மிகக் குறைவாகவே இருந்தது. நான் எவ்வாறு பட்ஜெட்டை நிறைவு செய்வேன் என்று சிந்தித்துக் கொண்டிருந்தபோதே தஹ்ரீகே ஜதீத் செயலர் என்னிடம் வந்து விட்டார். இந்த ஆண்டு எங்களின் இலக்கில் இவ்வளவு தொய்வு ஏற்பட்டு விட்டது. எனவே இவ்வருடம் உங்களுக்கு இவ்வளவு தொகையை இலக்காக நிர்ணயித்துள்ளோம் என்று அவர் என்னிடம் கூறினார். அதற்கு நான் என்னுடைய வருமானம் மிகக் குறைவானதாகும். நான் இவ்வளவு பெரிய தொகையை எங்கிருந்து கொடுப்பேன்? என்னால் இயலாது என்று கூறினேன். எப்படியிருப்பினும், நீங்கள் என்னிடத்தில் வந்து விட்டீர்கள். எனவே நான் ஏதாவது கொஞ்சம் தந்து விடுகிறேன். ஏனென்றால் ஒவ்வொரு ஆண்டும், தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுப்பதற்காக ஆண்டு முழுவதும் சேமித்து வைத்து தான் கொடுக்கிறேன். நான் அடுத்த ஆண்டிற்கு கூட இப்போதே சேமிக்கிறேன். அல்லாஹ்வின் திருப்தி உமது நோக்கம் என்றால், இது இந்த வருடத்திற்கு; இது அடுத்த வருடத்திற்கு என்ற எண்ணம் எதற்கு? என்ற சிந்தனை எனது உள்ளத்தில் எழுந்தது.

எனவே அந்த நபர் தொடர்ந்து கூறுகின்றார்: நான் வீட்டில் வந்து உட்கார்ந்துதான் இருந்தேன். அதற்குள் ஒருவரிடமிருந்து ஒரு தபால் வந்தது. அதில் ஒரு காசோலை (Cheque) இருந்தது. அந்தக் காசோலையில் எழுதியிருந்த தொகை நான் தஹ்ரீகே ஜதீத் செயலரிடம் (வாக்குறுதி) கொடுத்த தொகைக்கு சமமானதாக இருந்தது. அதில் அந்த தபாலை அனுப்பியவர் கடிதம் ஒன்றையும் வைத்திருந்தார். அதில் நான் உங்களிடமிருந்து இத்தனை வருடங்களுக்கு முன் கடன் வாங்கியிருந்தேன். அதனை திரும்ப செலுத்த மறந்து விட்டேன். அதற்காக நான் வருந்துகிறேன். அந்த பணத்தை தற்போது நான் திரும்ப செலுத்துகிறேன் என அந்த நபர் குறிப்பிட்டிருந்தார். பின்னர் இதேபோன்று வேறொரு இடத்திலிருந்தும் உடனடியாக ஒரு தொகை கிடைத்தது. ஆக, அல்லாஹ் உடனடியாக அவரது கணக்கு வழக்கை சரி செய்து விட்டது மட்டுமல்லாமல் அதிகரித்து வழங்கியும் விட்டான்.

தியாகம் செய்யக் கூடியவர்களுக்கு அல்லாஹ் இவ்வாறு அதிகரித்துக் கொடுக்கின்றான். அடுத்து வருடம் நாம் எவ்வாறு சந்தா கொடுப்போம் என்று சில மணி நேரம் கூட அவரை கவலையில் ஆழ்த்திவிட வில்லை. உடனடியாக கணக்கை சரிசெய்து விட்டான். **அவர்களுக்கு எவ்வித அச்சமும் ஏற்படாது. அவர்கள் கவலை அடையவுமாட்டார்கள். (2:263)** என்பதன் ஒரு பொருள் இதுவாகும். அதாவது அவர்களுடைய ஒவ்வொரு அச்சமும், கவலையும் உலகில் இன்பமாக மாறி விடுகின்றது. ஆனால் நிபந்தனை என்னவென்றால், தூய எண்ணத்துடன் அல்லாஹ்விற்காக தியாகம் செய்ய வேண்டும். மேலும் தியாகம் செய்த பிறகு நாம் ஜமாஅத்தின் மீது பெரிய உபகாரம் செய்து விட்டோம் என்ற உணர்வு ஏற்படுதல் கூடாது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீத் திட்டத்தினை தொடங்கிய போது எளிமையான வாழ்க்கையை மேற்கொள்ளும்படி கூறினார்கள். உணவு, உடை மற்றும் இதர விஷயங்களில் செலவைக் குறைத்துக் கொண்டு சந்தா கொடுக்கும்படி கூறினார்கள். ஜமாஅத் உறுப்பினர்களின் (பொருளாதார) நிலை அல்லாஹ்வின் அருளால் இன்றிருப்பது போன்று அன்றிருக்கவில்லை. ஆனால் அவ்வாறிருந்தும், ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் தியாகம் செய்தார்கள். மிக்க மகிழ்ச்சியுடன் தியாகம் செய்தார்கள். இன்றும் சில வீடுகளில் அந்த ஏழ்மை தென்படுகின்றது. இருப்பினும் இது ஒன்றும் நமது உபகாரமில்லை. நம்மிடத்தில் இன்னும் இருந்தால் இன்னும் அதிகமாக கொடுக்கலாமே? என்ற கவலை உள்ளத்தில் எழ வேண்டும். இவ்வனைத்தும் தியாகம் செய்யக் கூடியவர்களின் சந்ததிகளுக்கு அல்லாஹ் அருள் செய்கின்றான். இன்னும் அருள் செய்வான். எனவே ஒரு நம்பிக்கையாளர் அல்லாஹ்வின் அருளின் காட்சியைக் காணும்போது அவரின் பொருள் தியாகத்தின் தரம் இன்னும் அதிமாகி விடுகின்றது. பொருள் தியாகம் செய்த பிறகு அதனை உபகாரமாக சொல்லிக் காட்டுவது என்பது ஒரு பக்கம் இருந்தாலும், நம்பிக்கையாளர்கள் மறைவாக, ஒளிந்து ஒளிந்து வலக்கரம் கொடுப்பது இடக்கரத்திற்கு தெரியக்கூடாது என்ற வகையில் பொருள் தியாகம் செய்கின்றார்கள். என்னுடைய இறைவன் என்மீது திருப்தி கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது. மேலும் இந்த காட்சி இன்று அல்லாஹ்வின் அருளால் நமது ஜமாஅத்தில் பெரும்பாலும் காணக்கிடைக்கின்றன. ஜமாஅத்திடம் கோடிக்கணக்கான பணம் இருக்கின்றது. அதன் மூலமாக ஜமாஅத் தனது திட்டங்களை மிக எளிமையாக செயல்படுத்தி விடுகின்றது. இந்தப் பணம் எங்கிருந்து வருகின்றனது எனத் தெரியவில்லை? என்று அஹ்மதி மக்கள் நினைக்கின்றனர். அல்லாஹ் ஜமாஅத்தின் குறைந்த செல்வத்தில் எந்த அளவுக்கு பரக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றான் என்றால் அது உலகவாதிகளின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகும். அடுத்து ஜமாஅத்தில் கோடிக்கணக்கான அளவில் பணம் ஒன்றும் இல்லை. மாறாக தூய்மை, விசுவாசத்துடன் இறை திருப்தியை விரும்பியவாறு பொருள் தியாகம் செய்யக்கூடிய அஹ்மதிகளின் உள்ளத்திலிருந்து வெளிப்படும் எல்லையற்ற கரூவூலம் ஜமாஅத்திடம் உள்ளது. நம்மிடத்தில் இன்னும் இருந்தால் இன்னும் கொடுக்கலாமே? என்று அவர்கள் ஆசைப்படுகின்றனர். உணர்வும், ஆர்வமும், உத்வேகமும் அவர்களிடத்தில் உள்ளது. ஜமாஅத்தில் இதுபோன்ற ஆயிரக்கணக்கான உதாரணங்கள் உள்ளன. ஆனால் (அஹ்மதியல்லாத) மக்கள் பள்ளிவாசல் கட்டுவதற்காக நூறு முறை அறிவிக்கிறார்கள். ஆனால் அஹ்மதிகள் தனது தேவையை சுருக்கிக் கொண்டு பெரிய பெரிய தியாகங்கள் செய்கின்றனர். அதுவும் பெரும்பாலும் மறைவாக (பொருள் தியாகம்) செய்கின்றனர். ஆம்! சில பொருள் தியாகங்களை அறிவிக்கவும் செய்கின்றனர். ஆனால் அது கூட ஜமாஅத் சார்பில்தான் செய்யப்படுகின்றன. (பொருள் தியாகம் செய்யக்கூடிய) அவர்கள் அறிவிக்கப்பட வேண்டும் என ஆசைப்படுவதுமில்லை. சில திட்டங்களுக்காக சந்தா கொடுப்பவர்களின் பட்டியல் தயார் செய்யப்படுகின்றது. பின்னர் அது காலத்தின் கலீஃபாவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. ஆனால் அதுவும் அவர்களுக்காக துஆ செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் அவ்வாறு செய்யப்படுகின்றது. எனவே இதன் நோக்கம் நன்மையாகும்; பகட்டிற்காக அல்ல. மாறாக அவ்வாறு பொருள் தியாகம் செய்யக் கூடியவர்களுக்காக காலத்தின் கலீஃபா துஆ செய்ய வேண்டும். மேலும் அவர்களின் செல்வத்திலும், வாழ்விலும் அல்லாஹ் பரக்கத் செய்ய வேண்டும். அதன் மூலமாக அவர்களின் பொருள் தியாகத்தின் தரம் இன்னும் அதிகமாக வேண்டும் என்ற நோக்கத்தில்தான் காலத்தின் கலீபாவிற்கு இவ்வாறு பொருள் தியாகம் செய்தவர்கள் பற்றிய தகவல் தரப்படுகின்றது. மேலும் நன்மையில் ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள் என்ற இறை கட்டளையின் பக்கம் கவனம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும்தான் அவ்வாறு செய்யப்படுகின்றது.

இன்று தஹ்ரீகே ஜதீத் புதிய நிதியாண்டிற்கான அறிவிப்பு செய்யப்பட உள்ளது. இன்ஷா அல்லாஹ் நான் அது தொடர்பான விபரங்களை உங்கள் முன் வைப்பேன். இவ்வாறு அறிவிக்கப்படுவதன் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் கடந்த ஆண்டை விட பொருள் தியாகத்தில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் எழுகின்றது. மேலும் ஜமாஅத்தின் பொருள் தியாகம் என்பது ஜமாஅத் உறுப்பினர்களின் பொருள் தியாகத்தின் காரணத்தினாலே ஆகும். ஆக, பொருள் தியாகம் அறிவிக்கப்படுகின்றது என்றால் அது நன்மையில் முந்துங்கள் என்ற அல்லாஹ்வின் கட்டளையைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஆகும்.

இன்று முழு உலகிலும் ஜமாஅத் என்ற வகையில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உறுப்பினர்கள்தான் தங்களுடைய செல்வத்தை இரவிலும், பகலிலும் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் செலவு செய்பவர்கள் என்ற இறைவசனத்தை உண்மைப்படுத்தக்கூடியவர்களாக திகழ்கின்றனர். அதாவது செயல்ரீதியாக பகலும், இரவும் தியாகம் செய்யப்படுகின்றது. 24 மணி நேரமும் இந்த தியாகத்தின் தொடர் தொடர்கின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் பரவியுள்ளது. எல்லா நாடுகளிலும் பரவியுள்ளது. சில இடங்களில் இரவும், சில இடங்களில் பகலும் உள்ளது. நான் இப்போது குத்பா கொடுத்துக் கொண்டிருக்கின்ற இந்த சமயத்தில் கூட சில இடங்கள் காலைப்பொழுதாக இருக்கும். சில இடங்களில் இரவாக இருக்கும். மேலும் இன்னும் சில இடங்களில் நடு இரவாக இருக்கும். தஹ்ரீகே ஜதீதின் இந்த அறிவிப்புடன் வாக்குறுதி மற்றும் வசூல் என்ற தொடர் ஆரம்பமாகி விடுகின்றது. ஜமாஅத் உறுப்பினர்கள் மட்டுமல்ல, ஜமாஅத் என்ற வகையில் ஒரு நேரத்தில் இரவையும், பகலையும் ஒன்றாக்கி தமது தியாகத்தை அல்லாஹ்வின் முன் எடுத்து வைக்கின்றது. இரவும் பகலும் தியாகம் செய்யக் கூடியவர்கள் தொடர்பாக இறைவன் கூறியுள்ளது என்பது முஹம்மதிய்ய மஸீஹ் தோன்றி முழு உலகிலும் ஒரே சமுதாயம் என்ற வகையில் ஏற்படுத்தவிருந்த விஷயத்தை குறிப்பதாகும். அல்லாஹ்வின் மார்க்கத்தை இரவு, பகல் மற்றும் ஒவ்வொரு நொடிப் பொழுதும் உலகில் பரப்புவதற்காக மற்றும் உலகின் எல்லா பகுதிகளிலும் எல்லா நேரத்திலும் முஹம்மதிய மஸீஹின் வருகையின் நோக்கமான தக்மீலே இஷாத்தே ஹிதாயத் (நேர்வழியை பரப்புவதை முழுமை செய்தல்) என்பதை முழுமைப்படுத்துவதற்காக பொருள் தியாகங்கள் செய்யப்பட வேண்டும் என்பதற்காக இக்காலத்தில் அல்லாஹ் இந்த ஜமாஅத்தை ஏற்படுத்தியுள்ளான். உலகம் முழுவதும் அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பரப்புவது என்பது சாதாரண விஷயமல்ல. இந்தப் பணி முஹம்மதிய மஸீஹை ஏற்றுக் கொண்டுள்ளவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த போதனை மற்றும் நேர்வழி அன்னாரின் காலத்திலேயே முழுமை பெற்றது. இந்த முழுமையான நேர்வழியை உலகில் பரப்புவது அதனை முழுமை செய்வது அன்னாரின் இரண்டாவது வருகையின் போது நிகழ வேண்டியதாகும். எனவே இப்போது இது நமது கடமையாகும். உலகத்திற்கு எதிராக நமது வசதிவாய்ப்புகள் மிக மிக குறைவானதாகும். மாறாக நமது வசதிவாய்ப்புகள் மற்ற உலகத்தோடு ஒப்பிடுகையில் ஒன்றுமேயில்லை என்று கூறலாம். ஆனால் அல்லாஹ் எந்தப் பணியை நிறைவு செய்யும் பொறுப்பை நம்மிடத்தில் ஒப்படைத்துள்ளானோ நாம் அதற்காக இரவு, பகலாக தியாகங்கள் செய்து வந்தால் அதில் பரக்கத் செய்வது அல்லாஹ்வின் பணியாகும். அவனுடைய வாக்குறுதியாகும். அவன் பரக்கத் செய்கின்றான். அவன் பரக்கத் செய்வான் இன்ஷா அல்லாஹ்.

அல்லாஹ் கூறுகின்றான்: **அவர்களுக்கு எவ்வித அச்சமும் ஏற்படாது. அவர்கள் கவலை அடையவுமாட்டார்கள். (2:263)**

நிச்சயமாக உலகத்திடம் வசதிவாய்ப்புகள் அதிகமாக இருக்கலாம். அதிகாரம் அதிகம் இருக்கலாம். நிச்சயமாக இப்போது எண்ணிக்கையைப் பொருத்தவரை அஹ்மதி அல்லாதவர்கள் பெரும்பான்மையில் உள்ளனர். நாம் சிறிய ஜமாஅத்தாக உள்ளோம். ஆனால் அல்லாஹ் கூறுகின்றான்:

அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக இரவு, பகலாக தூய உள்ளத்துடன், எவ்வித பகட்டுமின்றி செய்யப்படுகின்ற உங்களது தியாகங்கள் அல்லாஹ்விடத்தில் ஒப்புக் கொள்ளப்படத்தக்கதாகும். எனவே நீங்கள் எவ்வித அச்சமும், கவலையும் அடைய வேண்டிய அவசியமில்லை. உலகம் நம்முடன் எப்படி நடந்து கொள்ளும்? நமது முன்னேற்றம் எவ்வாறு நிகழும்? நாம் செய்கின்ற தியாகங்கள் நல்ல விளைவை ஏற்படுத்துமா? ஏற்படுத்தாதா? என்ற கவலை வேண்டாம். எதுவரை தூய எண்ணத்துடன் நீங்கள் தியாகங்கள் செய்து கொண்டு செல்வீர்களோ அந்த தியாகங்கள் நல்ல விளைவை ஏற்படுத்திக் கொண்டேயிருக்கும் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஏனென்றால் இறைவன்தான் இறுதி முடிவை வெளிப்படுத்த வேண்டும். தியாகங்களுக்குப் பதிலாக 700 மடங்கு அல்லது அதை விட அதிகமாக நற்கூலி தருகின்றான் என்று இறைவன் கூறுகிறான். என் பக்கம் குனியக் கூடியவர்களின் தியாகத்தை நான் அதிகரிக்கவும் செய்கிறேன் எனவும் அல்லாஹ் கூறுகிறான். எவர்கள் அவனுடைய இபாதுர் ரஹ்மான் (அளவற்ற அருளாளனின் அடியார்கள்) ஆக மாறி தியாகங்கள் செய்கின்றார்களோ அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான். நீங்கள் எவ்வளவு

தியாகங்கள் செய்வீர்களோ அதனை அந்தந்த நேரத்திற்கேற்ப அதிகரித்துக் கொண்டே செல்வான். அவசரப்படத் தேவையில்லை. முடிவை நீங்கள் அல்லாஹ்விடம் விட்டு விடுங்கள். நீங்கள் தியாகங்கள் செய்தவாறு முஹம்மதிய மஸீஹின் அன்சார்களாக உங்களை நீங்களே ஆக்கிக் கொண்டு செல்லுங்கள். மேலும் நேர்வழியைப் பரப்புகின்ற பணியை முழுமை செய்வதில் முடிந்தவரை நீங்கள் உங்கள் பங்களிப்பை வழங்கிக் கொண்டே செல்லுங்கள். அவ்வாறு நீங்கள் செய்தால், எதனுடைய அடையாளங்கள் அல்லாஹ்வின் அருளினால் வெளிப்படத் தொடங்கி விட்டனவோ அதனுடைய முடிவை உங்களது வாழ்க்கையிலேயே நீங்கள் காண்பது ஒன்றும் தொலைவில் இல்லை. இன்ஷா அல்லாஹ் நமது ஜமாஅத் உறுப்பினர்களின் உயிர் மற்றும் பொருள் தியாகங்கள் நமது சிறிய எண்ணிக்கையை பெரும்பான்மையாக மாற்றி விடும். நம்முடைய பணி இறைதிருப்தியைப் பெறுவது மட்டும்தான். மேலும் அவனுடைய திருப்தியைப் பெறுவதற்கான பணிகளைச் செய்து கொண்டே செல்ல வேண்டும். மேலும் அதனை அடைவதற்காக உள்ளத்தில் ஓர் உத்வேகத்தை ஏற்படுத்தி ஒருபோதும் சோர்வடையக் கூடாது; ஒருபோதும் சோர்வடையக் கூடாது என்று உள்ளத்தில் உறுதிகொள்ள வேண்டும்.

இப்போது தஹ்ரீகே ஜதீதின் நடந்து முடிந்த ஆண்டின் நிலவரத்தை எடுத்து வைக்கிறேன். அல்லாஹ்வின் அருளால் இந்த அக்டோபர் 30 ம் தேதியுடன் முடிவு பெற்ற தஹ்ரீகே ஜதீதின் வருடம் 76 வது வருடமாக இருந்தது. அல்லாஹ்வின் அருளால் எண்ணற்ற பரக்கத்துகளை கொண்ட ஆண்டாக அது கழிந்துள்ளது. மேலும் இன்று நான் தஹ்ரீகே ஜதீதின் 77வது ஆண்டிற்கான அறிவிப்பை செய்கிறேன். அல்லாஹ் இந்த வருடத்தையும் முந்தைய வருடங்களைப் போன்று மாறாக முந்தைய வருடங்களை விட அதிகமான பரக்கத்திற்குரிய வருடமாக ஆக்குவானாக! அறிக்கையின்படி **உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத் தஹ்ரீகே ஜதீதில் கடந்த வருடத்தில் மொத்தம் 54,68,500 (ஐம்பத்து நான்கு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து ஐநூறு) பவுண்ட் தியாகங்களைச் செய்துள்ளது.** சில ஜமாஅத்துகளின் ரிப்போர்ட்டுகள் இன்னும் வரவில்லை. அதேபோன்று சிறிய நாடுகளில் முழுமையான தொடர்பும் ஏற்படுவதில்லை. ஒருவேளை தொகை வந்து கொண்டிருக்கலாம். கடந்த வருடத்தை விட இந்த வருடத்தின் தியாகம் **5,22,000 பவுண்டு அதிகமாகும்.** மேலும் இந்த வருடமும் **பாகிஸ்தான் தனது முதலிடத்தை** எல்லாரையும் விட முன்னிலை வகிக்கும் தகுதியை தக்க வைத்துக் கொண்டுள்ளது. மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம் உங்களுக்கு (U.K.ஜமாஅத்திற்கு) உரியதாகும். அது என்னவென்றால் எதிர்பாராத வகையில் என்று கூற முடியாது. மாறாக, அல்லாஹ்வின் தனிப்பட்ட அருளின் வெளிப்பாடாகும். அவன் உங்களின் முயற்சி மற்றும் உழைப்பில் பரக்கத் செய்துள்ளான். **இரண்டாவது இடத்திற்கு பிரிட்டன்** வந்து விட்டது. அது அமெரிக்கா மற்றும் ஜெர்மனியை மிகவும் பின்னால் தள்ளி விட்டது. இப்போது இங்கிலாந்து பெற்றுள்ள இந்த Jump மற்றும் முன்னேற்றம் எப்படி கிடைத்தது என்று அவர்களுக்கே புரியவில்லை. இரண்டு வருடத்திற்கு முன்பு வரை U.K. மற்றும் ஜெர்மனிக்கு இடையிலான வித்தியாசம் மிகவும் குறைவாகத்தான் இருந்தது. எந்த அளவுக்கென்றால் பலர் எனக்கு கடிதம் எழுதியிருந்தனர். இவ்வளவு தொகை தான் வித்தியாசம் என்றால் நாங்கள் எங்கள் கையிலிருந்து கொடுத்திருப்போமே! அதன் மூலமாக U.K. முந்தியிருக்குமே என்று கூறினர். எப்படியிருப்பினும் நீங்கள் (U.K.ஜமாஅத்தினர்) உழைப்பு மற்றும் துஆவின் மூலம் வேலை செய்தீர்கள். அதன் மூலமாக அமெரிக்காவை பின்னால் தள்ளி விட்டீர்கள். மாஷா அல்லாஹ். இது மிகப்பெரிய முன்னேற்றம் ஆகும். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை பாகிஸ்தான் மற்றும் மற்ற நாடுகளுக்கிடையிலான ஒப்பீட்டில் U.K. எட்டாவது, பத்தாவது இடத்தில்தான் இருந்தது. ஆனால் இப்போது அல்லாஹ்வின் அருளால் பாகிஸ்தானைத் தவிர்த்து மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது U.K. முதலிடத்தைப் பிடித்து விட்டது. இங்கு ஒரு விஷயத்தை நான் நினைவூட்ட விரும்புகிறேன். பழைய Record-களைப் பார்த்து எனக்கு ஆச்சர்யம் ஏற்பட்டது. 1988 -ல் U.K.ன் வாக்குறுதி மற்றும் வசூல் பாகிஸ்தானைத் தவிர்த்து மற்ற நாடுகளோடு ஒப்பிடும் போது இரண்டாவது இடத்தில் இருந்தது. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக பின்னால் சென்று விட்டது. இப்போது பாகிஸ்தானை தவிர்த்து மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது முதல் இடத்தை நீங்கள் பெற்றுள்ளீர்கள். தற்போது நீங்கள் பெற்றுள்ள முதலிடம் என்ற கண்ணியத்தை உங்களின் கடந்தகால நடைமுறையைப் போன்று இழந்து விடாதீர்கள். நீங்கள் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். இன்ஷா அல்லாஹ். இங்கு (U.K. விலும்) அஹ்மதி என்ற காரணத்தால் பகைமை அதிகரித்து வருகிறது. அஹ்மதி அல்லாதவர்களிடம் சில அஹ்மதி பெண்கள்

அடிவாங்கியுள்ளார்கள். சில ஆண்களும் அடி வாங்கி இருக்கலாம். அதன் நல்ல விளைவுகள் வெளிப்பட்டுள்ளது. அல்லாஹ் அடிவாங்கியதன் மூலம் செய்யப்பட்ட சிறிய உடல் தியாகத்தினால் பொருள் தியாகத்தில் உங்களை (U.K.ஜமாஅத்தை) முன்னேறச் செய்து விட்டான். சிலரின் வியாபாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. அஹ்மதி அல்லாதவர்கள், அஹ்மதிகளிடம் எந்தப் பொருளும் வாங்காதீர்கள் எனவும் கூறியுள்ளார்கள். அஹ்மதி அல்லாதவர்களிடம் வேலை பார்த்து வந்த அஹ்மதிகளை வேலையிலிருந்து நீக்கியும் விட்டார்கள். ஆனாலும் இந்த பகைமை நமக்கு வழியை எளிதாக்கித் தந்துள்ளது. எப்போதும் அல்லாஹ்வின் அருளால் பகைமை மற்றும் எதிர்ப்பு ஜமாஅத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது. U.K.சந்தாவின் முன்னேற்றத்தில் U.K. லஜ்னாவின் மிகப்பெரிய பங்களிப்பு உள்ளது. உங்களுடைய இலக்கை உங்களால் அதிகரிக்க முடியும் என்று லஜ்னாக்களிடம் ஒருமுறை நான் கூறியிருந்தேன். அதன்படி சுமார் 45, 40 ஆயிரம் பவுண்டுகளை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு பட்ஜெட்டில் அதிகரித்துள்ளார்கள். மொத்த தொகையில் மூன்றில் ஒரு பங்கு அல்லது அதைவிட அதிகமாக லஜ்னாக்களின் பங்களிப்பு உள்ளது என நான் கருதுகிறேன். **மூன்றாவது இடத்தில் அமெரிக்கா, நான்காவது இடத்தில் ஜெர்மனி** உள்ளது. நீங்கள் (U.K.ஜமாஅத்) இதே நிலையில் நீடித்தால் ஜெர்மனி உங்களை பிடிப்பது கடினம் தான். அந்த அளவுக்கு ஜெர்மனி பின்னால் தள்ளப்பட்டு விட்டது. ஆனால் அவ்வாறிருந்த போதிலும் ஜெர்மனிக்கு ரோஷம் வந்து உங்களை முந்துவது என்பதும் முடியாத காரியமாகும். ஏனென்றால் நாம் பெரிய Jump செய்து மிகவும் முன்னேறி விட்டோம். நம்மைப் பிடிப்பது U.K.ஜமாஅத்திற்கு பெரிய காரியமாகும் என்று ஜெர்மனி ஜமாஅத்தினர் கருதியிருந்தார்கள். ஆனால் இம்முறை அசாதாரணமான Jump மற்றும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அடுத்து **ஐந்தாவது இடத்தில் கனடா** உள்ளது. **ஆறாவது இடத்தில் இந்தியா** உள்ளது. **ஏழாவது இடத்தில் இந்தோனேஷியா**வும், **எட்டாவது இடத்தில் ஆஸ்திரேலியா, அரபு நாடுகளும் ஒன்பதாவது இடத்தில் சுவிட்சர்லாந்து**ம், அதைத் தொடர்ந்து **பத்தாவது இடத்தில் குறைந்த வித்தியாசத்தில் பெல்ஜியமும்** உள்ளது.

பாகிஸ்தானின் நிலவரத்தை நாம் அறிவோம். கடந்த பல ஆண்டுகளாக அசாதாரண நிலை நிலவுகின்றது. பொருளாதார ரீதியில் பெரிய பின்னடைவும், இந்த ஆண்டு வெள்ளப்பெருக்கினால் பொருளாதார ரீதியாக இன்னும் அதிகமாக பாதிப்பும் ஏற்பட்டு விட்டது. அங்கு விவசாயிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் மிகவும் ஆச்சரியமான விஷயம் தெரிய வந்துள்ளது. (வெள்ளம் பாதித்த) அந்த பகுதியைச் சேர்ந்த ஜமாஅத்துகள் தலைமையகம் அவர்களுக்கு கொடுத்த இலக்குகளை முழுமை செய்திருக்கின்றன. கிராமங்கள் மூழ்கி விட்டன. பயிர்கள் மூழ்கிப்போயின. சாமான்களை சுமந்து கொண்டு ஒன்றும் இயலாதவர்களாக இடம்பெயர்ந்து சென்றனர். நான் கூறியது போன்று பொருளாதார ரீதியாக நாட்டில் ஏற்பட்டுள்ள தாக்கம் அஹ்மதிகளையும் பாதித்துள்ளது. ஆனால் அல்லாஹ்வின் அருளால் உலக நஷ்டங்களினால் அவர்களின் ஈமானில் பாதிப்பு ஏற்படவில்லை. ஈமானில் மேலும் முன்னேறுகின்றனர். இந்த காரணத்தினால்தான் அவர்கள் தமது இலக்குகளை முழுமை செய்துள்ளனர்.

பாகிஸ்தானைப் பொருத்தவரையில் வசூலின் அடிப்படையில் லாஹூர் முதலிடம் பிடித்துள்ளது. நான் உள் நாட்டு கரன்சி மற்றும் கடந்த ஆண்டின் வசூலை விட அதிக வசூல் செய்த ஜமாஅத்துகளை கூறி விடுகின்றேன்.

1) அரபுநாடுகள் 2) இந்தியா. இந்தியாவின் உள்நாட்டு கரன்சியின் மதிப்பின் அடிப்படையில் 40% அதிக வசூல் செய்துள்ளார்கள். இந்தியாவிலும் சில இடங்களிலும் எதிர்ப்பு அதிகமாகி வருகிறது. குறிப்பாக முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் உள்ள அஹ்மதிகள் அதிகமாக துன்பங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் இதனால் பொருள் தியாகத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 3) ஆஸ்திரேலியா 4) U.K. 5) ஜெர்மனி 6) பாகிஸ்தான் 7) கனடா 8) சுவிட்சர்லாந்து 9) அமெரிக்கா 10) பெல்ஜியம்.

தனி நபர் சந்தாவின் அடிப்படையில் எல்லாரையும் விட அமெரிக்கா முன்னிலை வகிக்கின்றது. 2) சுவிட்சர்லாந்து 3) துபாய் 4) பாலஸ்தீன் 5) ஜப்பான் 6) பிரிட்டன் 7) பஹ்ரைன் 8) அயர்லாந்து 9) பிரான்ஸ் 10) கனடா, ஆஸ்திரேலியா.

கடந்த சில ஆண்டுகளாகவே தஹ்ரீகே ஜதீதில் பங்கு பெறுபவரின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் அழுத்தம் கொடுககப்பட்டு வருகின்றது. குறிப்பாக புதிய அஹ்மதிகள் மற்றும் குழந்தைகள் குறைந்த அளவில் சந்தா கொடுத்தாலும் சரியே அவர்கள் கண்டிப்பாக தஹ்ரீகே ஜதீதில் பங்கு பெற வேண்டும். எனவே இதன் பக்கம் ஜமாஅத்துகளில் கவனம் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் அதில் முன்னேற்றம் உள்ளது. அல்லாஹ்வின் அருளால் தற்போது தஹ்ரீகே ஜதீதில் பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 22 ஆயிரத்தையும் விட அதிகமாகியுள்ளது. இதில் இன்னும் வாய்ப்புள்ளது. குறிப்பாக ஆப்பிரிக்க நாடுகள் முயற்சி செய்ய வேண்டும். புதிய அஹ்மதிகள் கொஞ்சம் பைசாக்களை கொடுத்தாலும் சரியே. இதன் மூலமாகவும் சந்தாவில் முன்னேற்றம் ஏற்பட முடியும். இதன் பக்கம் கவனமூட்டுவது முபல்லிக்மார்களின் கடமையாகும். பொருள் தியாகம் செய்யும் போதுதான் ஜமாஅத்துடனான தொடர்பிலும் உறுதி ஏற்பட முடியும். அல்லாஹ்வுடனான தொடர்பும் அதிகரிக்கும். இதனை திருக்குர்ஆனில் பல இடங்களில் அல்லாஹ் கூறியுள்ளான். ஐந்தாம் பதிவேட்டின் துவக்கத்தின்போது நான் கூறியது போன்று பிறந்த குழந்தைகள் மற்றும் புதிய அஹ்மதிகள் மற்றும் 2005க்குப் பிறகு தஹ்ரீகே ஜதீதில் பங்கு பெறக்கூடியவர்களை அதாவது புதிய அஹ்மதிகளை ஐந்தாம் பதிவேட்டில் சேர்க்க வேண்டும். இதனை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். பாகிஸ்தானில் இந்த விஷயம் கருத்தில் கொள்ளப்படுகின்றது. மற்ற நாடுகளும் 2005க்குப் பிறகு தஹ்ரீகே ஜதீதில் பங்கு பெறக்கூடியவர்களின் பெயர்களுக்கு முன்னால் ஐந்தாம் பதிவேடு என எழுதி வாருங்கள். இவ்வாறு Record செய்வது ஒன்றும் கடினமல்ல. தஹ்ரீகே ஜதீத் செயலர்கள் கொஞ்சம் முயற்சி செய்ய வேண்டியதும் வரும் அவ்வளவுதான்.

ஆப்பிரிக்க நாடுகள் ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் முதலிடத்தில் உள்ளன. இந்நாடுகள் தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் அசாதாரண முயற்சிகள் செய்துள்ளன. அல்லாஹ் இந்த முன்னேற்றத்தை அதிகரித்து விடுவானாக! மேலும் கடந்த ஆண்டு வசூலின் அடிப்படையில் இவ்வருடம் கேம்பியா மற்றும் கானா ஜமாஅத்துகளும் அசாதாரண முன்னேற்றம் கண்டுள்ளது. கேம்பியா 40%ம், கானா 31%ம் அதிகரித்துள்ளது. ஆனால் கானாவில் இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. முதலிடத்திற்கு கானாவால் வர முடியும். எனவே கானாவில் (தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுப்பவர்களின்) எண்ணிக்கை மற்றும் வசூலை அதிகரிக்க குறிப்பாக முயற்சி செய்ய வேண்டும். பங்குபெறுபவர்களின் எண்ணிக்கையில் முன்னேற்றம் என்ற அடிப்படையில் சிரோலியூன், பெனின், ஃபுர்கினோபாஸோ மற்றும் நைஜீரியா ஜமாஅத்துகள் குறிப்பிடத்தக்கதாகும். முதலாவது வகாலத் மால் உடைய Record -ன்படி முதலாவது பதிவேட்டில் பங்குபெற்ற முஜாஹிதீன்கள் தொடக்கத்தில் அதாவது 76 வருடங்களுக்கு முன் தஹ்ரீகே ஜதீதில் பங்குபெற்றவர்களின் எண்ணிக்கை 5,927. இதில் 381 பேர் இன்று வரை அல்லாஹ்வின் அருளால் உயிரோடு இருந்து வருகின்றார்கள். தங்களின் சந்தாக்களை தாங்களே கொடுத்து வருகின்றனர். மீதமுள்ள இறந்துபோன 5,546 பேர்களில் 3,222 நபர்கள் சார்பாக, அவர்களின் உண்மையான வாரிசுகளாகிய உறவினர்கள் தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுத்து வருகின்றனர். அது தவிர மீதமுள்ள இறந்து போன 2,224 நபர்கள் சார்பாக ஜமாஅத் சகோதரர்கள் அவர்களுடைய சந்தாக்களை கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறாக, முதல் பதிவேட்டினை எப்பொழுதும் உயிருடன் வைக்க வேண்டும் (அதாவது முதல் பதிவேட்டில் கலந்து கொண்டவர்கள் சந்தாக்கள் தொடர வேண்டும்) என்ற ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் விருப்பம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நானும் இதன் பக்கம் கவனமூட்டியிருந்தேன். அதன் விளைவாக கடந்த இரண்டு ஆண்டுகளாக முதலாவது பதிவேட்டில் பங்கு பெற்றவர்களின் சார்பாக அவர்களின் உறவினர்கள் அல்லது ஜமாஅத் சகோதரர்கள் சந்தா வழங்கி வருகின்றனர். அல்ஹம்துலில்லாஹ்.

பாகிஸ்தான் உள் நாட்டில் முதல் மூன்று இடங்களை பிடித்த பெரிய ஜமாஅத்துகள் பின்வருமாறு: 1) லாஹூர் 2) ரப்வா 3) கராச்சி. ஒட்டுமொத்த வசூல் அடிப்படையில் அதிக பொருள் தியாகம் செய்யக் கூடிய ஜமாஅத்துகள் பின்வருமாறு: 1) ராவல்பிண்டி 2) இஸ்லாமாபாத் 3) முல்தான் 4) பாவல்பூர் 5) மீர்பூர் 6) நவாப்ஷா 7) காஸிகான் 8) ஜீலம் 9) பானேவால் 10) மண்டிபவாவுதீன்.

லாஹூரைப் பற்றி நான் கூறியிருந்தேன். லாஹூர் ஜமாஅத் உயிர் தியாகத்தில் முதல் இடத்தைப் பிடித்திருப்பது போன்று பொருள் தியாகத்திலும் தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. உயிர் தியாகிகளைப் பற்றிய லாஹூர் ஜமாஅத்தின் வேதனை துன்பம் அவர்களை சோர்வடையச் செய்துவிடவில்லை. பின்தங்கிவிடவில்லை. மாறாக அல்லாஹ்வின் அருளால் தியாகம் செய்வதில் மேலும் வேகம் அதிகரித்துள்ளது. உயிர், பொருள் மற்றும் நேரத்தை தியாகம் செய்வோம் என்ற உடன்படிக்கையை நிறைவேற்றி வருகின்றார்கள். அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக நிறைவேற்றி வருகின்றார்கள். இதேபோன்று பாகிஸ்தானின் மற்ற ஜமாஅத்துகளும் பொருள் தியாகத்தில் முன்னேறி வருகின்றது. மே மாதம் சம்பவத்திற்குப் பிறகு இளைஞர்களும், உடல்நலம் நன்றாக உள்ள அன்சார்களும் தமது நேரத்தை ஜமாஅத் பணிகளுக்காக ஒதுக்குகின்றனர். நேரத்தை தியாகம் செய்வோம் என்ற தமது உடன்படிக்கையை இவ்வாறாக நிறைவேற்றி வருகின்றார்கள். மேலும் எங்கு duty கொடுப்பதால் எப்போதும் உயிருக்கு ஆபத்து இருக்குமோ அங்கு duty கொடுக்க பெயர் தருகின்றார்கள். பாகிஸ்தானைப் பொருத்தவரையில் ஒவ்வொரு பாகிஸ்தானியின் உயிரும் ஆபத்தில் தான் உள்ளது. ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று ஒரு அஹ்மதியின் உயிர் மற்றவரைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக ஆபத்தில் உள்ளது. பாகிஸ்தான் என்ற ரீதியிலும் அஹ்மதி என்ற வகையிலும் உயிர் ஆபத்தில் உள்ளது. அல்லாஹ் மிக விரைவில் நம்மீது இருக்கும் இந்த அபாயத்தை நீக்குவானாக! மேலும் எதிரிகளுக்கு அவர்களின் தீய முடிவை காட்டுவானாக! தஹ்ரீகே ஜதீத் தொடர்பாக சில நாடுகள் முழுமையாக முயற்சி செய்வதில்லை என்று வகாலத்துல் மால் அவர்கள் கருதுகின்றார்கள். குறிப்பாக, எவர்களிடத்தில் ஜமாஅத் Project மற்றும் பள்ளிவாயில் கட்டும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்கள் நாம் தஹ்ரீகே ஜதீத் பக்கம் அதிக கவனம் செலுத்தினால் அதனால் தமது நாட்டின் மற்ற திட்டங்கள் பாதிப்புக்குள்ளாகி விடும் என்று கருதுகின்றார்கள். என்னைப் பொருத்தவரையில் இந்த நாடுகளின் ஜமாஅத் அமைப்பு தமது மக்களின் மீதும் தப்பெண்ணம் கொள்கின்றது. எல்லாவற்றையும் விட அல்லாஹ்வின் மீதும் தப்பெண்ணம் கொள்கிறது. எப்போதும் இதனை நினைவில் கொள்ளுங்கள். இந்த திட்டங்களுக்கான தொகை தலைமையிடத்திற்கு வரும்போது அந்த தொகையின் பெரும் பகுதி ஆப்பிரிக்கா, இந்தியா மற்றும் இதர ஏழை நாடுகளின் திட்டங்களுக்காக செலவிடப்படுகின்றது. எனவே பிறரின் உதவிக்காக உள்ளத்தை திறந்தால்தான் அல்லாஹ் செல்வத்திலும் உங்களது திட்டங்களிலும் பரக்கத் செய்வான். உங்களுடைய தொகை ஏழை நாடுகளுக்கு சென்று அந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, பள்ளிவாசல்கள் கட்டப்படும்போது அவர்கள் உங்களுக்காக துஆ செய்வார்கள். அதன் மூலமாக நீங்கள் பலன் அடைவீர்கள். ஓர் அஹ்மதி தியாகம் செய்கின்றார் என்றால் அல்லாஹ்வுக்காக தியாகம் செய்கின்றார். அதில் ஏதாவது குறைவு ஏற்படுகின்றதென்றால் அது பொறுப்பாளர்களின் பலவீனம் தென்படுகிறது. இந்நாடுகளின் பொறுப்பாளர்கள் தப்பெண்ணம் கொள்ளவில்லை என்றாலும், அவர்கள் தங்கள் மக்களை குறைமதிப்பீடு செய்கின்றார்கள். நீங்கள் தவக்குல் வைத்தலில் முன்னேறினால் அல்லாஹ்வும் பரக்கத் செய்வான். அல்லாஹ் தனது அருளால் தேவைகளை பூர்த்தி செய்கிறான். பூர்த்தி செய்வான். இன்ஷா அல்லாஹ். நீங்கள் அதில் பங்கு பெற்றால் அதன் பரக்கத்துகளிலும் நீங்கள் பங்கு பெறுவீர்கள். நற்கூலி கிடைத்து விடும்.

**அடுத்து பாகிஸ்தானில் மாவட்டரீதியாக முதல் பத்து இடம் பிடித்துள்ள ஜமாஅத்துகள்:**

1) சியால்கோட் 2) சர்கோதா 3) குஜ்ரன்வாலா 4) நாரோன்வால் 5) உமர்கோட் 6) பாவல்நகர் 7) ஹைதராபாத் 8) உக்காடா 9) ஹாஃபிழாபாத் 10) மீர்பூர், ஆஸாத் காஷ்மீர்.

**U.K.-ல் முதல் பத்து இடங்கள் பிடித்துள்ள ஜமாஅத்துகள்:**

1) ஹல்கா மஸ்ஜித் ஃபஸ்ல் 2) நூர் மார்டென் 3) வுஸ்டர்பார்க் 4) சர் பிரிட்டன் 5) வெஸ்ட்ஹில் 6) மேற்கு மஸ்ஜித் 7) செயின் 8) தெற்கு மான்செஸ்டர் 9) ரெய்ம்ஸ் பார்க் 10) ஜெலிங்கம்.

(இதே போன்று அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் கனடா ஆகிய நாடுகளில் தஹ்ரீகே ஜதீதில் முதல் பத்து இடங்கள் பிடித்துள்ள ஜமாஅத்துகளின் பெயர்களை ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.)

**இந்தியாவில் முதல் பத்து இடங்களைப் பிடித்த மாநிலங்கள்:**

1) கேரளா 2) ஆந்திரா 3) ஜம்மு காஷ்மீர் 4) தமிழ்நாடு 5) கர்நாடகா 6) பெங்கால் 7) ஒரிசா 8) பஞ்சாப் 9) உத்திரபிரதேசம் 10) லக்ஷத் தீவு.

**இந்தியாவில் முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ள ஜமாஅத்துகள்:**

1) ஹைதராபாத் 2) கோழிக்கூடு 3) காதியான் 4) கல்கத்தா 5) கண்ணூர் டவுண் 6) சென்னை 7) கருளாய் 8) கோயம்புத்தூர் 9) பெங்களூர் 10) ஆஸ்னூர்.

அல்லாஹ் இந்த சந்தா கொடுப்பவர்கள் அனைவரின் செல்வத்திலும் வாழ்விலும் பரக்கத் செய்வானாக! இவர்களை அல்லாஹ் பொருள் தியாகத்தில் முன்னேறச் செய்வானாக!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சந்தா என்ற தொடர் இந்த (நமது) அமைப்பிலிருந்து ஒன்றும் ஆரம்பமாகவில்லை. மாறாக நபிமார்களின் காலத்திலேயே பொருளாதார தேவையின் போது சந்தா வசூல் செய்யப்பட்டுள்ளது. சந்தா கொடுக்கும் படி கூறிய மாத்திரத்தில் வீட்டிலிருந்த எல்லா சாமான்களையும் கொண்டு வந்து வைத்து விட்டனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முடிந்தவரை (சந்தா) வழங்குங்கள் என்று கூறினார்கள். யார் எவ்வளவு கொடுக்கின்றார்கள் என்பதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காண விரும்பினார்கள். ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் எல்லா செல்வத்தையும் கொண்டு வந்து வைத்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பாதி செல்வத்தை கொண்டு வந்து விட்டார்கள். நீங்கள் உங்களுக்கு விரும்பமானவற்றை அல்லாஹ்வின் வழியில் செலவிடாத வரை இறை நேசத்தை பெற முடியாது என்பது முன்னரே சஹாபாக்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. இதில் சந்தா கொடுப்பது செல்வத்தை செலவிடுவது தொடர்பான அறிவுரை உள்ளது. அல்லாஹ்வுடனான உடன்படிக்கையை முழுமை செய்ய வேண்டும். அதனை நிறைவு செய்யாவிடில் அது நம்பிக்கை துரோகமாகி விடும். ஒரு மனிதனால் ஒன்றும் முடியாது. கூட்டு தியாகத்தில் பரக்கத் ஏற்படுகின்றது. பெரிய பெரிய அரசாங்கங்கள் கூட சந்தாக்களினால்தான் இயங்குகின்றன. வித்தியாசம் என்னவென்றால் உலக அரசாங்கங்கள் Tax என்ற பெயரில் கட்டாயமாக வசூல் செய்கின்றன. மேலும் நாம் நமது ஜமாஅத்தின் விருப்பம் மற்றும் எண்ணத்தின் அடிப்படையில் சந்தா கொடுக்கும்படி செய்துள்ளோம். சந்தா கொடுப்பதால் ஈமானில் முன்னேற்றம் ஏற்படுகின்றது. இது அன்பு மற்றும் தூய்மையின் அடிப்படையிலான வேலையாகும். இறை நெருக்கத்தை பெறுகின்ற மைதானம் காலியாக உள்ளது என்ற நற்செய்தியை உங்களுக்கு கூறுகிறேன். எல்லா சமுதாயங்களும் உலகத்தைத்தான் நேசிக்கின்றன. இறை திருப்தியைப் பெறக் கூடிய விஷயத்தின் பக்கம் உலகிற்கு கவனமில்லை. எவர்கள் முழு வேகத்துடன் இவ்வாசலில் நுழைய விரும்புகின்றார்களோ அவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாகும். அவர்கள் தமது ஆற்றலை வெளிப்படுத்த வேண்டும். இறைவனிடத்தில் சிறப்பான வெகுமதிகளை பெற வேண்டும். இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவனின் கரத்தினால் பூமியில் விதைக்கப்பட்ட விதை ஆவீர்கள். இந்த விதை முளைக்கும்; பூக்கும்; மலரும். எல்லா திசையிலும் அதன் கிளைகள் படரும். மேலும் ஒரு பெரிய மரமாகி விடும் என்று இறைவன் கூறியுள்ளான். எனவே இறைவனின் கூற்றின் மீது நம்பிக்கைக் கொண்டு இடையில் வருகின்ற சோதனைகளைக் கண்டு அஞ்சாதவர்கள். இறுதி வரை பொறுமை செய்யக்கூடியவர்கள் அருளுக்குரியவர்கள். அவர்களுக்கு துன்பங்கள் என்ற பூமி அதிர்ச்சி வரும். விபத்துகள் என்ற சூறாவளி வீசும். சமுதாயங்கள் அவர்களை எள்ளி நகையாடும். உலகம் அவர்களிடத்தில் மிக வெறுப்புடன் நடந்து கொள்ளும். (ஆனால்) இறுதியில் அவர்கள் அஹ்மதிகள் வெற்றி பெறுவார்கள். அருள்களின் வாசல்கள் திறக்கப்படும். இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப அமல் செய்யக்கூடிய பாக்கியத்தை அல்லாஹ் விதித்துள்ள அந்த வெற்றிகளை நாம் காண்பவர்களாக நாம் இருப்போமாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 05.11.2010**

Translated by : **Maulvi ABDUR RAHMAN TAHIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**